*கவனிக்க.- 2018.11.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2101 - 2018 දෙසැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2018.12.07

*2101 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2593 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2592 | ஏல விற்பனைகள் | 2598 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிமன்ற சான்றுப் பொருட்கள் ஏல விற்பனை
## நீதிவான் நீதிமன்றம்- கல்முனை

கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் எதிர்வரும் 2018.12.23 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை 1/2 (அரை) மணித்தியாலத்திற்கு முன்பு பார்வையிடலாம்.

3. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

4. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தை செலுத்தி உரிய பொருட்களை இந் நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

5. சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6 . இப் பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

ஐ.என். றிஸ்வான் ,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம் ,
கல்முனை.

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை.

| தொடர் இல. | வழக்கு இலக்கம் | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | AR/5291 | மண்வெட்டி | 01 |
| 02 | B/528/08 | ஸ்கூட் றைவர் | 01 |
| 03 | B/5174 | மண்வெட்டி | 01 |
| 04 | B/1634 | மண்வெட்டி | 01 |
| 05 | 2513 | மண்வெட்டி | 01 |
| 06 | B/7032 | அறிவித்தல் பலகை குழாயுடன் | 01 |
| 07 | 11350 | பூஃபர் | 02 |
| 08 | 15111/ PC/ 99 | சில்வர் தட்டுக்கள் | 07 |
| 09 | 36533 / PC/ 04 | நீலம், பச்சை, வெள்ளை நிற சிறிய கற்கள் | 03 |
| 10 | 36743 | சுத்தியல் | 01 |
| 11 | 37346 | கைக்கடிகாரங்கள் | 01 |
| 12 | 38103 /PC/05 | இரும்புப் பைப் | 01 |
| 13 | 42135 /PC/06 | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 14 | 43397 | கையடக்கத் தொலைபேசி | 03 |
| 15 | 43978 | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 16 | 45576 | மல்ரி மீற்றர் | 01 |
| 17 | 56583 /PC/10 | மண்வெட்டி | 01 |
| 18 | 58658 | 78cm இரும்புக் கேடர் | 01 |
| 19 | 59425 /PC/10 | 1. சவள் | 02 |
| | | 2. மண்வெட்டி | 01 |
| 20 | 59780 | சவள் | 01 |
| 21 | 60374 | சவள் | 02 |
| 22 | 60835 | மண்வெட்டி | 02 |
| 23 | 64190 | அலவாங்கு | 01 |
| 24 | 82016 / PC/15 | மண்வெட்டி | 01 |
| 25 | 87580 / PC/17 | சவள் | 02 |
| 26 | 98027 (i) | வெண்கலப் படிகம் | 01 |
| | (ii) | வெண்கல பட்டா | 01 |
| | (iii) | வெண்கல மணி (பழுதடைந்தது) | 01 |
| 27 | ரேடியோ | | 01 |
| 28 | பெரிய கண்ணாடி போத்தல் | | 01 |
| 29 | 1. அலுமினியச் சட்டி | | 01 |
| | 2. அலுமினியப் பானை | | 01 |
| 30 | கல்வனைஸ் பைப் | | 05 |
| 31 | இறப்பர் றோல் | | 02 |
| 32 | மண்வெட்டி | | 01 |
| 33 | கோடரி | | 06 |
| 34 | சவள் (பழுதடைந்தது) | | 02 |
| 35 | பாகுதறி | | 01 |
| 36 | ஏர் | | 01 |
| 37 | பழைய அறிவித்தல் பலகை | | 01 |
| 38 | | UPS | 01 |
| 39 | | CPU Fan | 02 |
| 40 | கணினி ஸ்பீக்கர் | (Computer Speaker) | 02 |
| 41 | மின்தராசு | | 02 |

| தொடர் இல. | வழக்கு இலக்கம் | உற்பத்தியும் மாதிரியும் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 42 | மின்தராசு சிறியது | | 01 |
| 43 | மேசைத் தராசு | | 04 |
| 44 | இழுவைத் தராசு 100kg | | 01 |
| 45 | இழுவைத் தராசு 50kg | | 02 |
| 46 | தட்டுத் தராசு | | 20 |
| 47 | சிறிய ஸ்பீக்கர் | | 02 |
| 48 | எண்ணெய் அளக்கும் அளவு கருவி | | 02 |
| 49 | இரும்பு வாளி | | 02 |
| 50 | இரும்பு உபகரணத்தின் பகுதிகள் | | 03 |
| 51 | இரும்பு றோல் | | 01 |
| 52 | பெரிய அலவாங்கு | | 01 |
| 53 | நடுத்தர அலவாங்கு | | 04 |
| 54 | சிறிய அலவாங்கு | | 03 |
| 55 | இரும்புக் கம்பி | | 01 |
| 56 | பெரிய சுத்தியல் | | 01 |
| 57 | Hydraulic பைப் | | 01 |
| 58 | வைத்திய உபகரணங்கள் | | - |
| 59 | இரும்புக் கதிரை | | 01 |
| 60 | மின் விசிறி (பழுதடைந்தது) | | 07 |
| 61 | சாக்கு | | 40 |
| 62 | குளியலறை சிங் | | 05 |
| 63 | குளியலறை கொமட் | | 03 |
| 64 | AR/441/17 | பஜாஜ் பல்சர் 180DTSi<br>அடிச்சட்டஇல.- MD2DHDJZZNCJ62413<br>இயந்திர இல. - DJGBNJ82116 | 01 |
| 65 | AR/442/17 | ஹீரோ ஹொண்டா சீடி டௌண்<br>அடிச்சட்டஇல. - MB4HA11EA69H02102<br>இயந்திர இல. - 06G27E09618 | 01 |
| 66 | AR/490/17 | ஹினரெக்<br>அடிச்சட்டஇல. - EC51013729<br>இயந்திர இல.- EC21013295 | 01 |
| 67 | B/6471/15 | ஹீரோ ஹொண்டா ஸ்பிளென்டர் (எரிந்தது)<br>அடிச்சட்டஇல. - 05C16C27426<br>இயந்திர இல. - 05C15M27510 | 01 |
| 68 | 78597 | ஹினரெக்<br>அடிச்சட்டஇல. - GL51010320<br>இயந்திர இல. - GJ51009912 | 01 |
| 69 | 83846 | ஹொண்டா C 50<br>அடிச்சட்டஇல. - C50-0560878<br>இயந்திர இல. - C50E-0561804 | 01 |
| 70 | 85667 | ஹீரோ ஹொண்டா ஸ்பிளென்டர்<br>அடிச்சட்டஇல. - 04A16C39464<br>இயந்திர இல. - 04A15M39090 | 01 |
| 71 | 86606 | ஹீரோ கிளமர்<br>அடிச்சட்டஇல. - MBLJA06ANGGH05207<br>இயந்திர இல. - JA06EJGGH03890 | 01 |
| 72 | 87508 | ஹீரோ கிளமர்<br>அடிச்சட்டஇல. - MEISE77DHF0024388<br>இயந்திர இல. - E3N8E0108829 | 01 |
| 73 | 87991 | ஹீரோ கிளமர்<br>அடிச்சட்டஇல. - MBLJA06ANGGG10222<br>இயந்திர இல. - JA06EJGGG36763 | 01 |

12-31

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய , ஹேலிஸ் குளோபல் பேவரேஜஸ் (பீவீஷ) எல்டீடி தனது பெயரை மார்ட்டின் பவர் ஹேலீஸ் (பிறைவட்) லிமிட்டட் என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

முன்னைய கம்பனியின் பெயர் : ஹேலிஸ் குளோபல் பேவரேஜஸ் (பீவீஷ) எல்டீடி

கம்பனி இலக்கம் : பீவீ 92432

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

புதிய கம்பனியின் பெயர்: மார்ட்டின் பவர் ஹேலீஸ் (பிறைவட்) லிமிட்டட்

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2018, நவெம்பர் 19.

12-18

### டொலேகந்த பவர் ( பிரைவேட்) லிமிடட்

### ( கம்பனி பதிவு இலக்கம் பீவீ 70023)

### கலைப்பவரை நியமித்தற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழ், 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி திங்கட் கிழமை இலக்கம் 19, டட்லி சேனாநாயக்க மாவத்த, கொழும்பு 8 இல் அமைந்துள்ள டொலேகந்த பவர் (பிரைவட்) லிமிடட் கூட்டத்தில் கம்பனியின் உறுப்பினர்கள் மூலம் இலக்கம் 3ஈ, கின்சி வீதி, கொழும்பு 8 எனும் முகவரியைச் சேர்ந்த கஹந்தவல ஆராச்சிகே கித்சிறி பெரேரா குணவர்தன ஆகிய நான், கலைப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதை இதனகத்து அறியத்தருகின்றேன்.

கே.ஏ.கே.பீ. குணவர்தன,
சட்டத்தரணி கலைப்பவர்.

இலக்கம் 3ஈ, கின்சி வீதி,
கொழும்பு 8,
2018,நவெம்பர் 19.

12-23/1

---

### டொலேகந்த பவர் ( பிரைவேட்) லிமிடட்

### ( கம்பனி பதிவு இலக்கம் பீவீ 70023)

### இனது உறுப்பினர்கள் மூலமான தன்னிச்சையான கலைவு

2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதியன்று இலக்கம் 19, டட்லி சேனாநாயக்க மாவத்த, கொழும்பு 8 இல் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்ற டொலேகந்த பவர் (பிரைவேட்) லிமிடட் டின் விசேட பொதுக் கூட்டத்தில் கம்பனியின் உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் விசேட தீர்மானம் தொடர்பாக அறிவித்தல் இதனகத்து வழங்கப்படுகின்றது

**விசேட தீர்மானம்:**

டொலேகந்த பவர் ( பிரைவேட்) லிமிடட் உறுப்பினர்களது தன்னிச்சையான நிறுவன கலைப்பின் ஊடாக கலைக்கப்பட்டது.

டொலேகந்த பவர் (பிரைவேட்) லிமிட்டட்டினது சபையின் கட்டளைப்படி,

எல்ஓஎல்சீ கோர்பரேட் சேர்விஸஸ்
(பிரைவேட்) லிமிட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2018, நவெம்பர் 19.

12-23/2

---

### என்செல்வத்த பவர் ( பிரைவேட்) லிமிடட்

### ( பதிவு இலக்கம் பீவீ 70025)

### கடன் கொடுத்தோர் மூலமான தன்னிச்சையான கலைவு

### உறுப்பினர்களது இறுதிக் கூட்டத்திற்கான அறிவித்தல்

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28ஆந் திகதியன்று இலக்கம் 19, டட்லி சேனாநாயக்க மாவத்த, கொழும்பு 8 இல் மு.ப. 10.00 மணிக்கு மேற்கூறப்பட்ட கம்பனியின் உறுப்பினர்களது இறுதிக் கூட்டம் பின்வரும் நோக்கத்திற்காக நடைபெறுவது தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341( 2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் இதனகத்து வழங்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் செயற்பாடுகள், வணிக பகிர்ந்தளிப்புகள் மற்றும் கலைவின் நிர்வாகம் என்பனவற்றின் விபரங்களை கூட்டத்தில் முன்வைத்தல்.

கே.ஏ.கே.பி. குணவர்தன,
(சட்டத்தரணி)
கலைப்பவர்.

இல. 19, டட்லி சேனாநாயக்க மாவத்த,
கொழும்பு 10,
2018, நவெம்பர் 15.

12-24/1

---

### என்செல்வத்த பவர் ( பிரைவேட்) லிமிடட்

### ( பதிவு இலக்கம் பீவீ 70025)

### கடன் கொடுத்தோர் மூலமான தன்னிச்சையான கலைவு

### கடன் கொடுத்தோர்களது இறுதிக் கூட்டத்திற்கான

### அறிவித்தல்

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28ஆந் திகதியன்று இலக்கம் 19, டட்லி சேனாநாயக்க மாவத்த, கொழும்பு 8 இல் மு.ப. 10.30 மணிக்கு மேற்கூறப்பட்ட கம்பனியின் கடன் கொடுத்தோர்களது இறுதிக் கூட்டம் பின்வரும் நோக்கத்திற்காக நடைபெறுவது தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341( 2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் இதனகத்து வழங்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் செயற்பாடுகள், வணிக பகிர்ந்தளிப்புகள் மற்றும் கலைவின் நிர்வாகம் என்பனவற்றின் விபரங்களை கூட்டத்தில் முன்வைத்தல்.

கே.ஏ.கே.பி. குணவர்தன,
(சட்டத்தரணி)
கலைப்பவர்.

இல. 19, டட்லி சேனாநாயக்க மாவத்த,
கொழும்பு 10,
2018, நவெம்பர் 15.

12-24/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு:-

கம்பனியின் பழைய பெயர் : இன்போடென்மன்ட் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 19359
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 1, கெஸ்டல் அவனியு, கொழும்பு 8
கம்பனியின் புதிய பெயர் : ஸ்கயி மீடியா நெட்வர்க் (பிறைவட்) லிமிடட்

12-36/1

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு:-

கம்பனியின் பழைய பெயர் : இன்போலோஜிக்ஸ் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 96726
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 1, கெஸ்டல் அவனியு, கொழும்பு 8
கம்பனியின் புதிய பெயர் : இன்போடென்மன்ட் (பிறைவட்) லிமிடட்

12-36/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு:-

கம்பனியின் பழைய பெயர் : ஸ்கயி மீடியா நெட்வர்க் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 63832
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.136 பீ, ஸ்டன்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை
கம்பனியின் புதிய பெயர் : விஸ் ப்ரோட்காஸ்டின் (பிறைவட்) லிமிடட்

12-36/3

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2018.10.04 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : சைனா ஸின்செங் கென்ஸ்ட்ரெக்ஷன் என்ஜினியரிங் கம்பனி (பிரைவேட் ) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 00204935
பதிவு முகவரி : இல. 47, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிரை) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்.

12-37

## அறிவித்தல்

### நேஷன் லங்கா இக்விடீஸ் ( பிறைவட்) லிமிடட்
### ( கம்பனி பதிவிலக்கம் பீவீ 4337)

### அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்தின் உத்தேச குறைப்பு

நேஷன் லங்கா இக்விடீஸ் (பிறைவட்) லிமிடட்டின் (குறித்த கம்பனி) பணிப்பாளர் சபையானது பிரேரித்து தீர்மானம் மேற்கொண்டு இத்தால் தமது பங்குதாரர்களுக்கு அறிவித்துக் கொள்வதாவது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிசள் சட்டத்தின் 59 ஆம் பிரிவின் சரத்துக்களுக்கமைவாக, நூற்றிப்பதினாறு மில்லியன் எழுநூறாயிரம் ரூபா (ரூ. 116,700,000.00) அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் 76,442,909 சாதாரண பங்குகளால் குறைக்கப்பட்டு , கம்பனியின் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் இருநூற்றி அறுபத் தைந்து மில்லியன் எழுநூறாயிரம் ரூபா (ரூ. 265, 700,000.00) பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது என்பதாகும். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சாதாரண பங்குகளின் எண்ணிக்கை மாற்றம் செய்யப்படாது நிலைத்திருக்கும்.

மேலே சொல்லப்பட்ட குறைப்பானது, கம்பனியின் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்துக்கெதிராக , ரூபா நூற்றி நாற்பத்தி ஒன்பது மில்லியன் ( ரூ.149 ,000,000.00) வரையான கம்பனியின் முன் கொண்டு வரப்பட்ட இழப்புகளை நீக்குவதால் பாதிப்புறும்.

அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்தின் உத்தேச குறைப்பு தொடர்பாக, விசேட தீர்மானமொன்றின் மூலம் பங்குதாரர்களின் ஆட்சேபனையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், 2019.01.24 ஆந் திகதியன்று வியாழக்கிழமை கம்பனியின் ஒரு மேலதிக பொதுக்கூட்டம் கூட்டப்படுகின்றது.

சபைக் கட்டளைப் பிரகாரம்,

நேஷன் லங்கா இக்விடீஸ் ( பிறைவட்) லிமிடட்.

12 - 38

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், 2015, ஓகத்து மாதம் 06 ஆந் திகதி கீழ் குறிப்பிட்ட பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர் :* செயாகொன் இன்டஸ்ட்ரீஸ் (பீவீடி) எல்டிடீ

*கம்பனியின் இல. :* பீ வீ 107548

*பதிவுஅலுவலகம் :* இல. 170, செண்ட் . ஜோசப் வீதி, கொழும்பு 14

செயாகொன் இன்டஸ்ட்ரீஸ் (பீவீடி) எல்டிடீ.,
பணிப்பாளர்.

இல. 170, செண்ட் . ஜோசப் வீதி,
கொழும்பு 14.

12 - 64

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பெயர் :* டொக்டர் ஜமீல் மெமோரியல் ஹொஸ்பிட்டல் (பிரைவெட்) லிமிட்டெட்

*பதிவிலக்கம் :* பீ வீ 00205180

*பதிவு முகவரி :* இல. 37, காசிம் வீதி, கல்முனை

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.10.11

கே. எம். ஷெஹான்,
கம்பனிச் செயலாளர்.

12 - 68

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் :* அப்ரிக்கன் குளோபல் லொஜிஸ்ட்டிக்ஸ் லங்கா (பீவீஉ) எல்டீடி

*பதிவிலக்கம் :* பீ வீ 00205069

*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018. 10.08

*பதிவு முகவரி:* இல. 79/7, அரலியா டெரஸ், பொல்கஸ்ஓவிட வீதி, மத்தேகொட

12- 79

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் .-*

*கம்பனியின் பெயர் :* டொமினிகன் செகூரிடி சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

*பதிவிலக்கம் :* பீ வீ 130467

*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018. 03.09

*பதிவு முகவரி:* இலக்கம் 170, கார்டன் சிடி, ஏகல, ஜா- எல

12- 89

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவிற்கு அமைவாக கம்பனி ஒன்றின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* எல் டி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவு இலக்கம் : பீவீ 79557

பதிவு செய்யப்பட்ட *முகவரி :* செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட்

குறைக்கப்படுவதற்கு முன்பு கூறப்பட்ட மூலதனம் ரூபா 65, 436,000 .00

குறைக்கப்பட்ட பின்பு கூறப்பட்ட மூலதனம் ரூபா 9,886,000 .00

குறைக்கப்பட்ட தொகை ரூபா 55, 550, 000.00

செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

இல.10,
ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு -05.

12-90

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சிலோன் கன்ஷியுமற் மீடியா (பிரைவேட்) லிமிடட்

*பதிவிலக்கம் :* பீவீ 00206054

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.11.07

*பதிவு முகவரி :* 128, நிவ்சிட்டி காடன்ஸ், கெடம்புவான புதிய வீதி, பிலியந்தல

கம்பனிச் செயலாளர்.

12-91

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : சர்வோடெக் (பீவீடி) எல்டிடீ

பதிவிலக்கம் : பீவீ 00204557

கூட்டிணைப்புத் திகதி: 2018.09.22

பதிவு முகவரி : இல. 92, தம்மிட்ட, ஹுனுமுல்ல, இலங்கை

12- 109

---

## விஷேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மட்டக்களப்பு இல. 26, அருணகிரி லேன், மட்டக்களப்பு, தற்காலம் மட்டக்களப்பு கூளாவடி கிழக்கு, இல.11, மாமாங்கம் கோயில் வீதி, செபமாலைமுத்து ஞானப்பிரகாசம், தே.அ.அ.இல. 602320987V ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மட்டக்களப்பு இல. 26, அருணகிரி லேன் திருமதி ராஜேஸ் நிர்மலா ஞானப்பிரகாசம் தே. அ.அ.இல. 677521996V என்பவருக்கு மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு அமரசிங்கம் மகாலிங்கசிவம் அவர்களால் 2012.07.01 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1478ஆம் இலக்கம் கொண்டதும் மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயக திணைக்களத்தில் புத்தகம் 20 பக்கம் 09 தொடர் இலக்கம் 441 இல் 2012.07.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள விசேட அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் மூலம் வழங்கியிருந்த குறித்த அற்றோணித்தத்துவப் பத்திரத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கியிருந்த அதிகாரத்தினை சட்டரீதியாகவும் அதிகார பூர்வமாகவும் இரத்துச் செய்கின்றேன் . எனது சார்பாக குறித்த ஆதனம் தொடர்பில் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் இன்று முதல் நான் பொறுப்பாக இருக்கமாட்டேன் என்பதனை அறிவித்துக் கொள்கின்றேன்.

செபமாலைமுத்து ஞானப்பிரகாசம்.

12- 01

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 300/சி, படுவத்தை, ராகமையில் வசிக்கும் தொன் பீடர் பிரான்சிஸ் மாரசிங்க, தேசிய அடையாள அட்டை இலக்கம் 490690441V ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறிவித்துக் கொள்வது யாதெனில், இல. 361/10, 6 ஆம் ஒழுங்கை, ஜினசேன மாவத்தை, மஹர, கடவத்தையில் வசிக்கும் 851210024V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உடைய உடகட உபாசகசே ருக்ஷான் திலீப முதியன்சே என்பவரால் எனக்கு வழங்கப்பட்ட 2015.07.23 ஆந்திகதியிடப்பட்ட பிரபல நொத்தாரிசு எம்.டி.லலிதா குணரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவப் புத்தகத்தில் 144 காண்டத்தில் 112 ஆம் பந்தியில் 7491 ஆம் இலக்கத்தையுடைய நாளாந்த பதிவேட்டில் பதியப்பட்ட இல. 8800 ஐ உடைய அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன். இதன் பின் இந்த அற்றோணித்தத்துவம் செல்லுபடியற்றதாக கருதப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொன் பீடர் பிரான்சிஸ் மாரசிங்க.

2018.11.14.

12- 69

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 05, மட்டக்குளி, கெமுனுபுர, இல. 91/8 மற்றும் தற்போது ஐக்கிய இராச்சியத்தில், LU27NF, லூட்டன், ஸ்டொகின் ஸ்டோன் வீதி, இல. 68 இல் வசிக்கும் கடவத ஆரச்சி கங்கானமலாகே அருணி துஷார மானெல் அமரசிங்க ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு விஜேசிங்க ஆரச்சிகே நீதா திசாநாயக்க எழுதி அத்தாட்சிப்படுத்திய 1998, மாச்சு 19 ஆந் திகதிய இல. 76 ஐக் கொண்ட அற்றோணித் தத்துவத்தினால் எனது அற்றோணித்தத்துவ உரிமம் உடையவராக, இராஜகிரிய, சபுமல் பிளேஸ், இலக்கம் 100 இல் வசிக்கும் பியட்ரிஸ் மொனிகா லெவீ அல்லது அலகப்பெரும என்பவர் நியமிக்கப்பட்டார். மேற்குறிப்பிடப்பட்ட 1998, மாச்சு 19 ஆந் திகதிய இலக்கம் 76 ஐக் கொண்ட அந்த அற்றோணித் தத்துவத்தை நான் இப்பொழுது முதல் இரத்துச் செய்கிறேன் எனவும், அது இதன் பின்னர் அதிகாரமற்ற அற்றோணித்தத்துவமாகும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

கடவத்த ஆரச்சி கங்கானமலாகே அருணி
துஷார மானெல் அமரசிங்க.

12- 142

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

2015, ஒகத்து 20ஆந் திகதிய இலக்கம் 2965 ஐக் கொண்ட எழுதி உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் அற்றோணித்தத்துவப் புத்தகத்தின் 8817 ஆம் தொகுதியில் இலக்கம் 177 ஆக நுழைவிக்கப்பட்டும் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்வது சம்பந்தமாக:-

இத்தாலி, மிலானோ, 20156, எஸ்பினஸ் 110, வயால் என்ற முகவரியில் வசிக்கும் , கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் மதியாஸ்புள்ளே லால் அசோக் பெர்ணாண்டோ ஆகிய நான், பயபக்தியுடனும், நேர்மையுடனும், உண்மையாகவும் சத்தியம் செய்து பின்வருவனவற்றை பிரகடனப்படுத்துகின்றேன்.

1. பிரசித்த நொத்தாரிசு, டபிள்யூ. எஸ். ரொஷான் நிலந்த பெர்ணாண்டோ அவர்களால் உறுதி செய்யப்பட்ட 2015, ஒகத்து 20ஆந் திகதிய 2965 ஆம் இலக்கஅற்றோணித் தத்துவத்தினால் இல. 34/ A, ரோசகுசும் மாவத்தை, இஹலகட்டுனேரிய ,

கட்டுநேரியவை வசிப்பிடமாகக் கொண்ட வர்ணகுலசூரிய சந்திம சஜீவனி கொஸ்தா ( தே.அ.அ.இல. 807824007V) என்பவரை இலங்கையில் எனது உண்மையான , சட்டரீதியான அற்றோணித் தத்துவதாரராக நியமிக்கப்பட்டார்.

2. மேலே குறிப்பிடப்பட்ட அற்றோணித்தத்துவமானது தினப் புத்தகஇலக்கம் 177 இல் 8817 ஆம் தொகுதியில் 02 ஆம் மடிப்புப் பக்கத்தில் சரியாகப் பதியப்பட்டு இருந்தது.

3. மேற்குறிப்பிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உடையவர் நம்பிக்கைக்கு முரணாக எனது அறிவுறுத்தல்களுக்கு எதிராக செயற்பட்டுக்கொண்டு இருப்பதன் காரணத்தால் இந்த அற்றோணித் தத்துவம் இப்பொழுதிலிருந்தே இரத்துச் செய்யப்படுகிறது.

லால் அசோக் பெர்ணாண்டோ.

12- 143

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வத்தளை, ஹுனுப்பிட்டி, நாஹேனவத்த, இலக்கம் K 17 என்ற முகவரியில் வசிக்கும், மாக்கவிட்டகே, லலித் சுஜீவ பெரேரா (தே.அ.அ.இல. 692852265V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ஆர். ஷிரோமனி அவர்கள் அத்தாட்சிப்படுத்திய 3023 ஆம் இலக்கமும் 2018.09.21 ஆந் திகதியுமுடைய விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் வத்தளை, ஹுனுப்பிட்டி, நாஹேனவத்த, இலக்கம் 132/57/1 எனும் முகவரியில் வதியும் வலிமுனி தேவகே கமலா ஐராங்கனி ( தே.அ.அ.இல. 606112980V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து நடைமுறையற்றதாக்குவதுடன் அவ் அற்றோணித்தத்துவம் மூலம் செய்யப்படும் எந்தவொரு அலுவல்கள் சம்பந்தமாக இன்று முதல் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாழ் மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

எம்.எல்.எஸ். பெரேரா.

12- 373

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி மாவட்டத்தில் , கட்டுகஸ்தோட்டை, ரணவன வீதி, இல.164/4 இல் வசிக்கும் ராஜகுரு முதியன்சேலாகே கிரிசாந்த பண்டார ராஜகுரு ஆகிய நான், கட்டுகஸ்தோட்டை, உடுவாவல , இல. 138 இல் வசிக்கும் அதுல பண்டார உடுவாவல அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு நிஹால் திஸாநாயக்க அவர்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஓகத்து 12 ஆந் திகதியுடைய 1169 ஆம் இலக்கம் கொண்ட தினப்புத்தகம் 1172 , இதழ்: 51 71 ஆம் பிரிவின் கீழ் பதியப்பட்டுள்ள அற்றோணித் தத்துவத்தினை இத்தால் இரத்துச் செய்கின்றேன் எனவும் , அவ் அற்றோணித் தத்துவக்காரரின் இதனகத்துப் பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியப்படுத்துகின்றேன்.

ஆர். எம்.கே. பீ. ராஜகுரு .

இல. 164/4, ரணவன வீதி,
கட்டுகஸ்தோட்டை.

12- 156

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கணேமுல்ல, கொஸ்ஸின்ன, இலக்கம் 105/ஏ 12 எனும் முகவரியில் வசிக்கும் கல்மன்கொட ஜானகீ பியதர்சனீ ஆகிய என்னால் யக்கல, அமுத்கம, போகமுவ, இலக்கம் 175 ஒ இல் வசிக்கும் அதிகாரி அப்புஹாமிலாகே சந்திரசிறி அதிகாரி என்பவருக்கு கம்பஹா பிரசித்த நொத்தாரிசு திரு. எல். ஜீ. மாரசிங்க என்பவரால் 2013, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்பத்தப்பட்டு வழங்கப்பட்ட 2335 ஆம் இலக்க அற்றோணிப்பத்திரத்தை 2018.12.03 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டதை அறிவித்துக் கொள்கின்றேன். மேலும் இத்தினத்திலிருந்து அதிகாரி அப்புஹாமிலாகே சந்திரசிறி அதிகாரி எனும் என் பெயரில் மேற்கொள்ளும் எந்த விதமான நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புதாரியில்லை என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

கல்மன்கொட ஜானகீ பியதர்சனீ .

2018.12.03.

12- 420

---

# ஏல விற்பனைகள்

## டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் அவ்வாதனம் அமைந்துள்ள கொழும்பு மாவட்டம் , மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு, கொடிகமுவ தெற்கு B கிராம அலுவலர் பிரிவு மஹரகம நகர சபை எல்லைக்குட்பட்ட வரிப்பண இல. 11/6A மஹவத்த ஒழுங்கை, நல்லவத்த பாதை கொடிகமுவ மஹரகமையில் புஷ்பா மோட்டர்ஸ் இல் அமைந்துள்ள சூழலில் பொருத்தப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள சகல நடைமுறை சொத்துக்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள்.**

2018, திசெம்பர் மாதம் 30ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள புஷ்பா மோட்டர்ஸ் வளாகத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஈட்டுமுறி 444 இன் மூலம் ஈடு வைக்கப்பட்டுள்ள சொத்து**

| எண்ணிக்கை | விபரம் |
|---|---|
| 800 | Break Item |
| 900 | Clutch Item |
| 650 | Belt Item |
| 350 | Rubber Item |
| 500 | Razor |
| 28 | Arm Complete |
| 500 | Bush |
| 275 | Bulb |
| 39 | Head Light Complete |
| 1500 | Filter |
| 500 | Electrical Item |
| 45 | Oil Item |
| 250 | Water Pump |
| 850 | Oil Seal |
| 275 | Suspension Parts |
| 600 | CV Joints |
| 950 | Power Steering Seal |
| 100 | Sensor Item |
| 45 | Grease Item |
| 478 | Fan Belt Item |
| 60 | Timing belt Item |
| 75 | Engine Items |
| 179 | Spark Plug Items |
| 65 | Cable Items |
| 179 | Spark Plug Items |
| 65 | Cable Items |
| 500 | Mount Items |
| 15 | Piston Items |
| 28 | Ring Set |
| 375 | Gasket Set |
| 20 | Kin Pin |
| 30 | Clutch Plate Pressure Plate Item |

**இவ்வாதனம் புஷ்பா மோட்டர்ஸ் எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் மஹரகமையைச் சேர்ந்த ஜயசூரிய ஆரச்சிகே ரத்னதேவ ஜயசூரிய மற்றும் கோனதுவகே தொன் புஷ்பா ரஞ்சனி ஆகியோர் கடப்பாடுடையவர்களாக டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 444ஆம் இலக்க முறியின் மூலம் டீஎப்சீசீ வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனம் (டீஎப்சீசீ வர்தன வங்கியின் பின் தொடர்ந்து வரும் வங்கி)**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2018.11.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.11.13 ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் 2018.11.14 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2018.12.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000 ரூபா;*
*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா.*

*கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** *முகாமையாளர், சட்டப் பிரிவு டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யூ.ஏ.டி இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி: 011-2 371 371.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மடை,*
*கண்டி.*

*தொலைபேசி இல.: 081-2210595/071- 8446374/071-4962449*

*12- 85*

---

**டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்துக்குப் பொருத்தமான சொத்து, கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு கொடிகமுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவு, மஹரகம நகர சபை எல்லைக்குட்பட்ட மஹரகம கொடிகமுவ கிராமத்தில் மஹவத்த ஒழுங்கை, நல்லவத்த பாதையில் அமைந்துள்ள பட்டதொம்பகஹவத்த எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் H.A.D. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.03.21 ஆந் திகதிய 5742 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 4A எனும் காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 12.70 பேர்ச் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.**- *மஹரகம நகர மத்தியிலிருந்து பிலியந்தல பாதையில் சுமார் 150 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகவுள்ள நல்லவத்த பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாக சந்திக்கும் மஹவத்த ஒழுங்கைக்குள் பிரவேசித்து சுமார் 75 மீற்றர் தூரம் சென்றால் இடதுபக்கமாகவுள்ள பாதையில் சுமார் 35 மீற்றர் தூரம் சென்றதும் இவ்வாதனம் அமைந்துள்ளது.( மஹவத்த ஒழுங்கை வரிப்பண இல. 11/6A- 11/6B- 11/ 6B1எனும் சொத்துகள்)*

**இவ்வாதனம் புஷ்பா மோட்டர்ஸ் எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தைக நடாத்திச் செல்லும் மஹரகமையைச் சேர்ந்த ஜயசூரிய ஆரச்சிகே ரத்னதேவ ஜயசூரிய மற்றும் கோனதுவகே தொன் புஷ்பா ரஞ்சனி ஆகியோர் கடப்பாடுடையவர்களாக டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5457/5817/258/444/402/442/557/1283 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் டீஎப்சீசீ வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனம் (டீஎப்சீசீ வர்தன வங்கியின் பின் தொடர்ந்து வரும் வங்கி)**

2018, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப.11.15 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2018.11.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.11.13 ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் 2018.11.14 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2018.12.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1% (நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகாரசபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** முகாமையாளர், சட்டப் பிரிவு டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யு.ஏ.டி இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி: 011-2 371 371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595/071- 8446374/071-4962449

12- 86

**செலான் வங்கி பீ. எல்.சீ. - பொரளஸ்கமுவ கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

''கடன்பட்டோர் / ஈடுசெய்தவர் '' என்ற வகையில் கொஹுவளையைச் சேர்ந்த மொகமட்பைரோஸ் காசீம் மற்றும் நுகேகொடையைச் சேர்ந்த வீரசிங்க ஆராய்ச்சிகே டொன் திஸ்ஸ என்பவர்களால் பன்னிப்பிட்டிய பதிவு அலுவலகத்தில் பதியப்பட்டு கம்பனி கூட்டிணைப்பு பற்றிய 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்துக்கமைய கலர் ஸோன் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ. எல். சீ. க்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

**1 ஆம் அட்டவணை**

மேல் மாகாணத்தில்,கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரள பல்லே பத்து மஹரகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மஹரகம பிராந்திய செயலாளர் பிரிவில் ஜம்புகஸ்முல்ல 526D கிராம அலுவலர் பிரிவு கொன்கடவில கிராமத்தில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 50/ 5 ''கஹடகஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எச்.டீ. பெர்னாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்டு 1995.08.09 ஆந்திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4285 இல் துண்டு A சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற மணல், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் , கட்டடங்கள் மற்றும் அனைத்துமுடனும் பத்தொன்பது தசம் சைபர் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.19.5பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 4285 துண்டு A கொண்டுள்ளது.

அத்துடன் வீதிமுறைகள் அதன் மீதும் அதனூடாகவும் நிலவரைபட இல. 3051 இல் குறிப்பிட்டபடி துண்டு 3 இன் விபரங்கள் பின்வருமாறு.-

மேல் மாகாணத்தில்,கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரள பல்லே பத்து மஹரகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மஹரகம பிராந்திய செயலாளர் பிரிவில் ஜம்புகஸ்முல்ல 526D கிராம அலுவலர் பிரிவு கொன்கடவில கிராமத்தில் அமைந்துள்ள ''கஹடகஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர்எல்.வை.கமஹே என்பவரால் தயாரிக்கப்பட்டு 1983.09.30 ஆந்திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3051 இல் துண்டு 3 (10 அடி அகலமான பாதை) சகலதும் பிரிக்கப்பட்டு மூன்று தசம் நாலு சைபர் பேர்ச் (0ஏ.0றூ.3.40பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 305 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2018, திசெம்பர் மாதம் 26ஆந் திகதி மு. ப. 11.45 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்** : கொழும்பிலிருந்து கொழும்பு- அவிசாவளை வீதி மார்க்கமாக கம்பஹா சந்தி வரை

சென்று பின் வலது பக்கமாக உள்ள பெபிலியான வீதியால் திரும்பி 200 மீ. செல்லவும். பின் வலது பக்கமாக உள்ள ஜம்புகஸ்முல்ல மாவத்தையால் திரும்பி 100 மீ. தூரம் சென்று இடதுபக்கமாக உள்ள 9 ஆம் ஒழுங்கையால் திரும்பி 50 மீ. செல்லவும். பின் மீண்டும் இடது பக்கமாக உள்ள தனியார் வீதியால் 10 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இடதுபக்கத்தில் தனியார் வீதியில் அமைந்திருக்கும்.

**2 ஆம் ஏல விற்பனை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரள பல்லே பத்து கெஸ்பாவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கெஸ்பாவ பிராந்திய செயலாளர் பிரிவில் அரவல மேற்கு கிராம அலுவலர் பிரிவு அரவல கிராமத்தில் அமைந்துள்ள "நாகஹாகனத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி ( அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 1984.12.24 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1679 மீளளவிடப்பட்டது) அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 2006.09.01 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1731 இல் துண்டு 8 சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மணல், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் பதினைந்து பேர்ச் (0ஏ.0று.15பே.) விஸ்தீரணத்தைத் துண்டு 8 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2018, திசெம்பர் மாதம் 26ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்** : கொழும்பிலிருந்து ஹொரண வீதி ( B84) மார்க்கமாக பொக்குந்தர சந்தி வரை சென்று இடது பக்கமாக உள்ள மக்குளுதுவ வீதியால் திரும்பி 500 மீ. தூரம் செல்லவும் . பின் மீண்டும் அரவ்வல பொக்குந்தர வீதி 1.4 கி.மீ. தூரம் சென்று வலதுபக்கமாக உள்ள ரத்ன மாவத்தையால் மீண்டும் 400 மீற். தூரம் சென்று பின் இடது பக்கம் திரும்பி 50 மீ. தூரம் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இடதுபக்கத்தில் அமைந்திருக்கும்.கொழும்பிலிருந்து கெரீம்பு - அவிசாவளை வீதியால் (A4) மஹரகம நகரம் வரை சென்று வலதுபக்கமாக உள்ள மஹரகம - பிலியந்தல வீதியால் திரும்பி அரவ்வல சந்திவரை சென்று அங்கிருந்து அரவ்வல- பொக்குந்தர வீதியால் 700 மீ. செல்லவும். பின் இடது பக்கமாக உள்ள ரத்ன மாவத்தையால் திரும்பி 400 மீ. சென்று இடதுபக்கமாக திரும்பி 50 மீ. சென்றால் குறக்கப்பட்ட சொத்து வீதியின் இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** : 2018.10.05 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2018.10.08 ஆம் திகதிய "திவயின", "த ஜலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ் காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
2. உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனைவரி அத்துடன் உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதம் (1%);
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000 ;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 1000;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.

7. கொள்வனவு விலையின் மிகுதி 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள், விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்".

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச்செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை தலைமை அலுவலகம் (சட்டம்) செலான் வங்கி பீ. எல். சீ. செலான் டவர், இல. 90 காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
தொ.பே.011- 2456479, 011-2456472.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்து செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல: 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல.: 011-3068185, 2572940.

12- 97

---

**மக்கள் வங்கி**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான 29ஊ என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை

**01. ஊவா மாகாணம் , பதுளை மாவட்டத்தில் பின்தென்ன பள்ளேவத்த கோறளையின் ரீதிமாலியெத்த பிரதேச சபை எல்லைக்குள், ரிதீமாலியெத்த பிரதேச செயலகப் பிரிவில் 13ஏ குருச்சிதென்ன கிராம அலுவலர் பிரிவில் குருச்சி தென்ன கிராமத்தில் அமைந்துள்ளதும், "நிஸ்ஸங்கயாயயில் கலகாவ ஹேன " என அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். கே. சீ. பிரேமசந்திரவினால் 2007.04.06 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2007.04.10 ஆம் இலக்க வரைபடத்தின்**

**காணித்துண்டம் இல. 01 இன் இரண்டு றூட் சைவர் தசம் எட்டு ஐந்து பேர்ச் (0ஏ.2றூ.0.85பே.) பரப்பளவு கொண்ட காணியும் அதில் அமைந்துள்ள இலைகுலை பழங்கள், கட்டடங்கள் உட்பட மற்றும் அனைத்தும் அடங்கும்.**

**02. மேற்குறிப்பிட்ட குருச்சிதென்ன கிராம அலுவலர் பிரிவில், குருச்சிதென்ன கிராமத்தில் அமைந்துள்ளதும் "நிஸ்ஸங்கயாயயில் கலகாவ ஹேன" என அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.கே.சீ. பிரேமசந்திரவினால் 2007.04.06ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட (10/4/2007 ஆம் இலக்க வரைபடத்தில் சரியாக இருக்கும்) 6059 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு இல. 02 இன் முப்பத்தியிரண்டு தசம் இரண்டு இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.32.22பே.) பரப்பளவு கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள இலைகுலை, பழங்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கும்.**

*மக்கள் வங்கியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் என்னால் மேற்படி ஆதனத்தை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**மேலதிக விபரங்களுக்காக.-** *2018.10.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.10.29 ஆந் திகதிய தினமின மற்றும் டேய்லி நிவுஸ் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்களைப் பார்க்கவும்.*

**ஆதனத்துக்கான அணுகுவழி.-** *பிபில- மஹியங்கனை வழியாக, பதுளை வீதியின், ஆதாஉல்பத்த வீதியில் 5.கி.மீ. தூரம் சென்றதும் வரும் அராவ வீதியில் குறித்த ஆதனம் இருக்கும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** *விலை நிர்ணயிக்கப்பட்டவுடன் கொள்வனவாளர் கீழே குறிப்பிடும் விதமாக பணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்:-*

*(1) கொள்வனவு விலையில் 10%;*
*(2) மாகாண அதிகார சபைக்கு செலுத்தப்படற்பாலதான 1%வரி ;*
*(3) ஏல விற்பனையாளரின் தரகாக கொள்வனவு விலையின் (2 1/2%) ;*
*(4) எழுது வினைஞர் மற்றும் வெளியிடுதல் கட்டணம் 1,000.00 ரூபா;*
*(5) விற்பனையின் மொத்த ஆகு செலவும் ஏனைய விதிப்பனவுகளும், எவையேனுமிருப்பின் ;*
*(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரை தீர்வை;*

*கொள்வனவு விலையின் 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிரதான முகாமையாளர் (அறவீடு) மக்கள் வங்கி, பதுளை கிளை, பிரதேச பிரதான அலுவலகம், (பதுளை) இலக்கம்24, ஆர்.எச். குணவர்தன மாவத்தை, பதுளை என்ற முகவரிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.*

*தொலைபேசி இல. 055- 2222165, 2222342, 2223067, 2223068.*
*தொலைநகல்: 055- 2222361.*

*உரித்துறுதிகளும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மேற்படி முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம்.*

*கொடுப்பனவுகள் மேற்கூறப்பட்டுள்ளவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 சதவீதத்தை வங்கி செலுத்தாதிருந்து ஆதனத்தை மீளவிற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*ஈ.எஸ். ராமநாயக்க,*
*நீதிமன்றஆணையாளர்,*
*உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும்*
*பெறுமதி மதிப்பீட்டாளரும் சமாதான நீதிவான்*
*(நாடுமுழுவதும்).*

*இல. 11/55, போகஹவத்த,*
*குடாபுத்கமுவ, அங்கொடை*

*தொலைபேசி இல.: 011- 2053286, 072- 3207533, 076-9217329, 072- 0881044.*

*12- 115*

---

**மக்கள் வங்கி - பதுளை முதியங்கனை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான 29டீ என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையின், பள்ளேபத்துவ, தெஹிவளை- கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குள் வோட் 2இல் களுபோவில, துடுகெமுனு வீதியில் அமைந்துள்ள 190/3 வரிப்பண இலகக்கத்தைக் கொண்ட ''கஹட்டகஹலந்த அல்லது கஹட்டகஹவத்த, துண்ஹவுல் குருந்துவத்த மற்றும் ஹேதவக்ககஹவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். அனில் பீரிஸினால் 1990.02.25 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1049 ஏ ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் இல. பி 1 இன் பதின்மூன்று தசம் ஏழு ஐந்து பேர்ச். (0ஏ.0றூ.13.75பே.) பரப்பளவு கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள இலைகுலை பழங்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கும்.**

*மக்கள் வங்கியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் என்னால் மேற்படி ஆதனத்தை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**மேலதிக விபரங்களுக்காக.-** *2013.01.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2013.01.17 ஆந் திகதிய தினமின மற்றும் டேய்லி நிவுஸ் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்களைப் பார்க்கவும்.*

**ஆதனத்துக்கான அணுகுவழி.-** கொஹுவல சந்தியிலிருந்து துட்டுகெமுனு வீதியில் நேரே (கொழும்பு ஹொரண பிரதான வீதி) பாமன்கடை பக்கத்திற்கு 200 மீற்றர் தூரத்துக்கு செல்லவும். கொஹுவல பொலிஸ் நிலையத்தை கடந்து பீட்டர் டி. பெரேரா மாவத்தைக்கு இடது பக்கத்திற்கு திரும்பி 40 மீற்றர் செல்லவும். அந்த வீதியின் எல்லையில் இடது பக்கத்தில் இந்த ஆதனம் உள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விலை நிர்ணயிக்கப்பட்டவுடன் கொள்வனவாளர் கீழே குறிப்பிடும் விதமாக பணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10%;
(2) மாகாண அதிகார சபைக்கு செலுத்தப்படற்பாலதான 1%வரி ;
(3) ஏல விற்பனையாளரின் தரகாக கொள்வனவு விலையின் (2 1/2%) ;
(4) எழுது வினைஞர் மற்றும் வெளியிடுதல் கட்டணம் 1,000 ரூபா;
(5) விற்பனையின் மொத்த ஆகு செலவும் ஏனைய விதிப்பனவுகளும், எவையேனுமிருப்பின் ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைத் தீர்வை;

கொள்வனவு விலையின் 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிரதான முகாமையாளர் (அறவீடு) மக்கள் வங்கி , பதுளை கிளை, பிரதேச பிரதான அலுவலகம், (பதுளை) இலக்கம் 24, ஆர்.எச். குணவர்தன மாவத்தை, பதுளை என்ற முகவரிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி இல. 055- 2222165, 2222342, 2223067, 2223068.
தொலைநகல்: 055- 2222361.

உரித்துறுதிகளும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மேற்படி முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம்.

கொடுப்பனவுகள் மேற்கூறப்பட்டுள்ளவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 சதவீதத்தை வங்கி செலுத்தாதிருந்து ஆதனத்தை மீளவிற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

